DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 161/2024

வழக்கு சாட்சி: PW:5 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாயக்கண்ணன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | ஜெயராமன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 19.12.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம் தருமபுரியில் தரஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 11.03.2024ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நான் அலுவலகத்தில் இருந்தபொழுது தருமபுரி குடிமைப்பொருள் வழங்கல் குற்றபுலனாய்வு காவல்துறை ஆய்வாளர் அவர்கள் அலுவலகம்வந்து 21பைகளில் சுமார் 1025கிலோ எடையுள்ள அரிசியை ஒப்படைத்தார். நான் மேற்படி 1025கிலோ அரிசியை பெற்றுக்கொண்டு அதற்கான ஒப்புகை ரசீதை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புகை சீட்டு நான் வழங்கியதுதான். **(08.03.2024ம் தேதியிட்ட ஒப்புகை சீட்டு அசல் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் அரிசியை பகுப்பாய்வு செய்வதற்காக 21 அரிசி பைகளில் இருந்து தலா 650 கிராமம் மாதிரிஎடுத்து தருமபுரியில் உள்ள மண்டல ஆய்வகத்திற்கு அனுப்பிவைத்தேன். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u> –** (எதிரிதரப்பில்)

என்னிடம் வேண்டுகோள் கடிதத்தின்படி நான் ஒப்புகை சீட்டு வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 161/2024

வழக்கு சாட்சி: PW:6 நாள்: 30.12.2024.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைதாசன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | வடிவேல் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தருமபுரி மண்டல ஆய்வுகூடத்தில் தரக்கட்டுப்பாட்டு பிரிவில் உதவி மேலளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.03.2024ம் தேதி தருமபுரி சிவில் சப்ளை குடோனில் இருந்து 650கிராம் எடையுள்ள அரிசியை பகுப்பாய்விற்காக அனுப்பி இருந்தார்கள். மேற்படி அரிசியை பகுப்பாய்வு செய்ததில் அதில் குருனை 20.06 சதவீதம் இருந்தது. கனிமம் 0.02 சதவீதம் இருந்தது. 1.4 சதவீதம் சேதாரம் இருந்தது. 1.6 சதவீதம் நிறம் மாறிஇருந்தது. 02 சதவீதம் வெளிறிய நிறத்தில் இருந்தது. மேலும் கீழ்இனம்கழப்பு 0.6 சதவீதம் இருந்தது. அரிசி தவிடு நீக்கப்படாமல் 9.6 சதவீதம் இருந்தது. முடிவில் மேற்கண்ட அரிசியானது பொதுவிநியோ திட்டத்தின்கீழ் வழஙகப்படும் அரிசி என சான்று அளிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் தரச்சான்றிதழ் நான் வழங்கியதுதான். **(13.03.2024ம் தேதியிட்ட தரச்சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> – (எதிரி தரப்பில்)

650கிராம் அளவுள்ள அரிசியை சிவில் சப்ளை குடோனில் இருந்து அனுப்பட்டது 21 பைகளில் இருந்து எடுக்கப்பட்டதா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரியிடமிருந்து 21 பைகளில் அரிசி கைப்பற்றப்பட்ட இடம்குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். 11.03.2024 ம் தேதியன்றுதான் எங்கள் ஆய்வகத்திற்கு மாதிரி அரிசி சோதனைக்காக அனுப்பட்டது என்றால் சரிதான். போலிசார் என்னை எனது அலுவலகத்தில் வைத்து விசாரித்தனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழத்திற்கு அரிசி ஆலையில் இருந்து அனுப்படும் அரிசியின் தரம் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். அரிசி நாட்கள் ஆனால் அதன் தரம் மாறும் என்றால் அரிசியின் மனம் மட்டும் மாறும். மருந்த அடிப்பதால் அரிசியின் மனம் மாற வாய்ப்புள்ளது என்றால் வாய்புள்ளது.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 426/2022

வழக்கு சாட்சி: PW:5 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கமணி | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | மாதையன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது அதியமான்கோட்டை கோடியூரில் குடியிருந்து டிஎன்வி பள்ளி அருகே பழகடைவைத்து நடத்தி வருகிறேன். தேதி மாதம் நியாபகம் இல்லை, சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக இரவு சுமார் 09.00 மணியளவில் சத்தம்கேட்டு நான் சென்று பார்த்தபோது டிஎன்வி பள்ளி திரும்பும்இடத்தில் இருவர் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்திருந்தனர். அதில் ஒருவர் இறந்துவிட்டார், மற்றொரு நபருக்கு அடிப்பட்டு இரத்தம் வந்த நிலையில் இருந்தார். இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை . வேறுஎதுவும் விபத்து குறித்து எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தபோதும் நான் இவ்வாறுதான் கூறினேன்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசுதரப்பில் வேண்டியதால் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 01.01.2022-ம் தேதி இரவு 08.40 மணியளவில் டிஎன்வி நகர் நுழைவுவாயில் இருந்த எனது உறவினர் சரவணன் என்பவர் இருசக்கர வாகனத்தில் ஒருவரை பின்னால் அமரவைத்து வந்தபோது தருமபுரியில் இருந்துவந்த மற்றொரு இருசக்கர வாகனம் வேகமாகவந்து சரவணன் ஓட்டிவந்த வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், நான் விபத்தை நேரடியாக பார்த்தேன் என்றும்கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்பொழுது எதிரியை காப்பற்றவேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** – (எதிரிதரப்பில் இல்லையென தெரிவிக்கப்பட்டது )

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No.24 /2024

வழக்கு சாட்சி: PW:7 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பச்சியப்பன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | சின்னசாமி | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை** –

நான் தற்போது குப்பூர் கொல்லகொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 23.07.2023 –ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் குப்பூரில் உள்ள எனது நிலத்துக்கு அருகே சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது மாது, வேல்முருகன், பழனி, அமரன், மல்லிகா ஆகியோர் மதி, ரவிசந்திரன், ஆறுமுகம், கல்லியாணி ஆகியோரை கட்டையால் அடித்தார்கள். தடுக்க சென்ற என்னையும் முருகன் கட்டையால் எனது முன்தலையில் அடித்தார். விலக்கவந்த எனது அண்ணி காசியையும் முருகன் கட்டையால் முன்தலையில் அடித்தார். பின்னர் எதிரிகள் அனைவரும் என்னைக்கா இருந்தாலும் சாவு என்கையில்தான் என்று மிரட்டினார்கள். கண்டாரோலி, தேவடியா பையா என தகாத வார்த்தைகாளலும் எதிரிகள் எங்களை திட்டினார்கள். பின்னர் நாங்கள் அனைவரும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்கைக்காக சென்று சேர்ந்தோம். போலிசார் என்னை வழக்கு குறித்து விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** – (எதிரிகள் தரப்பில்)

1. வழக்கு சப்பவம் நடந்த தேதி மற்றும் மாதம் சரியாக நியாபகம் இல்லை, சுமார் ஒன்றைரை வருடங்களுக்கு முன்பாக நடந்தது. எங்களுக்கும் எதிரிகளுக்கும் சுமார் ஐந்து வருடங்களாக முன்விரோதம் உள்ளது. எங்களிடையே நிலம் தொடர்பான வரப்புதகராறு உள்ளது. வரப்பு தகராறு பிரச்சனை உள்ள நிலம் ஆறுமுகம் பாகத்தில் உள்ளது. எதிரிகள் ஆறுமுகம் நிலத்தின் வழியாகத்தான் அவர்களது வீட்டிற்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல, அவர்களுக்கு வேறுவழி உள்ளது. ஏற்கனவே எங்கள் இருதரப்பிற்கும் வேறு வழக்குகள் இந்நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். நிலம்குறித்து சிவில் வழக்குகள் எதுவும் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.

2. தகாத வார்த்தைகளால் எதிரிகள் ஆறுமுகம் வீட்டின் முன்பாக வைத்து பேசினார்கள். எதிரிகள் அவர்களது நிலத்தை பாகம் பிரிக்கவேண்டி சர்வேயர் வைத்து அளப்பதாக கிராம உதவியாளர் மூலம் எங்களது தகவல் தரப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் ஆரம்பித்தபோது நான் மட்டும்தான் அங்கிருந்தேன். நாங்கள் அடித்ததால் எதிரிகள் மருத்துவைனையில் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் எதிரிகளை அடிக்கவில்லை. எதிரிகள் கொடுத்த புகாரின்மீது எங்கள் தரப்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். காட்டுவேலான் கட்டையால் எதிரிகள் அடித்தார்கள். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் அரசு மருத்துவனையில் வைத்து வாங்கினார்கள், அதன்பின்னிட்டு விசாரிக்கவில்லை. நான் போலிசாரிடம் எங்களை தாக்க பயன்படுத்திய கட்டையை எடுத்து கொடுக்கவில்லை.

3. நாங்கள் எதிரிகளை தாக்கிய வழக்கில் இருந்து தப்பிக்கவேண்டி பொய்யான புகார் இவ்வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் அவர்கள் நிலத்தை அளக்ககூடாது என்பதற்காக எதிரிகள் எங்களை தகாதவார்த்தைகளால் திட்டி, தாக்கியதாக பொய்யான புகார் கொடுக்கப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No.24 /2024

வழக்கு சாட்சி: PW:8 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கம்பதாசன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | தர்மலிங்கம் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது பாரதிபுரம் குமரபுரிகாலனியில் குடியிருந்துவருகிறேன். நான் சர்வேயராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றேள்ளேன். ஆஜர் எதிரிகள் யாரென்று எனக்கு நியாபகம் இல்லை. தேதி மற்றும் மாதம்நியாபகம் இல்லை, சுமார் இரண்டு வருடங்களுங்கது முன்பாக மாது என்பவர் நிலத்தை அளக்கவேண்டி பணம் கட்டியதால் நானும், கிராம உதவு ஆய்வாளர் முனுசாமி என்பவரும் குப்பூரில்உள்ள மாது என்பவர் நிலத்துக்கு காலை 10.00 மணிக்கு சென்றோம். நிலத்தை அளந்து முடித்துவிட்டு மாதுவீட்டில் அமர்ந்திருந்தோம். பின்னர் அங்கிருந்து நாங்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். சண்டை நடந்தது எதுவும் நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை இது குறித்து விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசுதரப்பில் வேண்டியதால் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 27.04.2023-ம் தேதி காலை 10.30 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்தபோது எதிரிகள் அனைவரும் அ.சா.1, அ.சா.3, அ.சா.4, அ.சா.7 ஆகியோரை தகாத வார்த்தையால் பேசி தடியாலும், கல்லாலும் அடித்து காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்பொது வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை** – (எதிரிகள் தரப்பில் இல்லையென தெரிவிக்கப்பட்டது).

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 23 /2024

வழக்கு சாட்சி: PW: 4 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அமரா | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | மாது | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது குப்பூர்கொல்லகொட்டாயில் குடியிருந்து செங்கல் வேலைக்கு சென்றுவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.04.2023ம் தேதி காலை சுமார் 10.00 மணியவில் நாங்கள் நிலம் அளப்பதற்காக எங்களது நிலத்திற்கு சென்றபொழுது 1–வது எதிரி ஆறுமுகம் நிலத்தில் கால்வைக்ககூடாது என்று தடுத்தார். மேலும் கண்டாரோலி பையா தேவடியா பையா என்று தகாத வார்த்தைகளால் 1வது எதிரி எங்களை பார்த்து திட்டினார். நாங்கள் எங்கள் நிலத்தைத்தான் அளக்கிறோம் என்று கூறியபோது 1–வது எதிரி ஓடிச்சென்று கொடுவாளை எடுத்துவந்து நிலத்தில் இறங்கினால் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். பேசிக்கொண்டிருந்தபோதே 1–வது எதிரி கொடுவாளால் எனது மகன் அ.சா.1–வேல்முருகனின் வலது கழுத்தில் மற்றும் வலதுபக்க தலையில் வெட்டினர். விலக்கசென்ற எனது கணவர் மாதுவை ரவிசந்திரன், மதி ஆகியோர் கட்டையால் கண்ணின்மீது அடித்துவிட்டனர், அத்துடன் இடதுகால் பெருவிரல்மீதும் அடித்தனர். கல்யாணி எனது இடது கண்ணத்தின்மீது கல்லால் அடித்துவிட்டார். எனது தங்கை மல்லிகாவை

அனைவரும் சேர்ந்து கட்டையால் அடித்தனர். பின்னர் எங்களை எனது மகள் மங்கம்மாள் மற்றும் நாகராஜ் ஆகியோர் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்று சேர்த்தனர். பின்னர் போலிசார் என்னை வழக்கு குறித்து விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள் தரப்பில்)

1. எங்களது நிலமும் 1–வது எதிரி ஆறுமுகனின் நிலமும் அருகேஅருகே உள்ளது என்றால் சரிதான். நாங்கள் நிலம் வாங்குவதற்கு முன்னதாகவே எதிரிகள் மேற்படி நிலத்தில் இருந்துவருகிறார்கள் என்றால் சரிதான். நிலம் தொடர்பாக எங்களுக்கும், எதிரிகளுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது என்றால் சரிதான். நிலம் தொடர்பாக சுமார் 30 வருடங்களாக எங்களுக்குள் முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். ஊர்பெரியோர் மூலம் பஞ்சாய்த்து ஏற்கனவே பேசப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிலத்தை அளந்தபோது நாங்கள் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை, பொரியோர்கள் மூலம் சொல்லியிருந்தோம்.

2. நிலத்தை அளந்தபோது 1–வது எதிரி ஆறுமுகம் நிலத்தில் இறங்கி அளக்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது 1–வது எதிரி அவரது நிலத்தில் இறங்கி அளக்கவேண்டாம் என்றும், வேறு முட்டுக்கல் பார்த்து அளந்துகெள்ளும்மாறு கூறினார் என்றால் சரியல்ல. 1–வது எதிரி அவ்வாறு கூறியதால் நாங்கள் 1–வது எதிரி, அவரது மனைவி, சகோதரர் ஆகியோரை தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் தாக்கிய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யான புகார் இவ்வழக்கில் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரின்மீது எங்கள் மீது இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவனையில் சேர்ந்து சிகிச்சைபெற்றேன். போலிசார் என்னை மருத்துவனையில் வைத்து விசாரித்தனர்.

3. எதிரிகள் எங்களை தகாத வார்த்தைகளால் திட்டவுமில்லை, தாக்கவுமில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 23 /2024

வழக்கு சாட்சி: PW: 5 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மல்லிகா | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | கண்ணன் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை** –

நான் தற்போது குப்பூர்கொல்லகொட்டாயில் குடியிருந்து விவசயாம் செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 27.04.2023–ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் எங்களது நிலத்தில் சர்வயேர் வைத்து நிலத்தை அளந்தபோது 1–வது எதிரி ஆறுமுகம் கொடுவாளை வைத்துக்கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டி நிலத்தை அளக்ககூடாது என மிரட்டினார். மேலும் 1–வது எதிரி, அ.சா.1 வேல்முருகனின் தலையில் கொடுவாளால் வெட்டினார். மாதுவை கல்யாணி, ரவிசங்கர், காசி, மதி, ஆறுமுகம் ஆகியோர் கல் மற்றும் கட்டையால் அடித்தார்கள். நான் சென்று தடுத்தபோது கல்யாணி கல்லால் எனது வலதுபக்க இடுப்பு மற்றும் முதுகில் அடித்தார். 1–வது எதிரி கொடுவாளால் பழனி என்பவரின் முதுகின் மீதுவெட்டினார். பின்னர் நாங்கள் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று சேர்ந்தோம். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள் தரப்பில்)

1. எங்களது நிலமும் 1–வது எதிரி ஆறுமுகனின் நிலமும் அருகேஅருகே உள்ளது என்றால் சரிதான். நாங்கள் நிலம் வாங்குவதற்கு முன்னதாகவே எதிரிகள் மேற்படி நிலத்தில் இருந்துவருகிறார்கள் என்றால் சரிதான். நிலம் தொடர்பாக எங்களுக்கும், எதிரிகளுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது என்றால் சரிதான். நிலம் தொடர்பாக சுமார் 30 வருடங்களாக எங்களுக்குள் முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். ஊர்பெரியோர் மூலம் பஞ்சாய்த்து ஏற்கனவே பேசப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனி என்பவரை 1–வது எதிரி கொடுவாளால் முதுகில் வெட்டியதாக போலிசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் என்னை கல்லால் இடுப்பு மற்றும் முதுகில் அடித்தாகவும் போலிசாரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல.

2. நாங்கள் மருத்துவனையில் சிகிச்சைக்காக சேருவதற்கு முன்னதாகவே எதிரிகள் சிகிச்சைக்காக சேர்ந்தார்கள் என்றால் சரிதான். நிலம் அளப்பது தொடர்பாக ஆறுமுகம் குடும்பத்தாருக்கு நாங்கள் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆறுமுகம் நிலத்தில் இறங்கி அளந்தபோதுதான் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது 1–வது எதிரி அவரது நிலத்தில் இறங்கி அளக்கவேண்டாம் என்றும், வேறு முட்டுக்கல் பார்த்து அளந்துகெள்ளும்மாறு கூறினார் என்றால் சரியல்ல. 1–வது எதிரி அவ்வாறு கூறியதால் நாங்கள் 1–வது எதிரி, அவரது மனைவி, சகோதரர் ஆகியோரை தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் தாக்கிய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யான புகார் இவ்வழக்கில் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரின்மீது எங்கள் மீது இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எனது அக்கா மகன் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No.23/2024

வழக்கு சாட்சி: PW:6 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கம்பதாசன் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | தர்மலிங்கம் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது பாரதிபுரம் குமரபுரிகாலனியில் குடியிருந்துவருகிறேன். நான் சர்வேயராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றேள்ளேன். ஆஜர் எதிரிகள் யாரென்று எனக்கு நியாபகம் இல்லை. தேதி மற்றும் மாதம்நியாபகம் இல்லை, சுமார் இரண்டு வருடங்களுங்கசு முன்பாக மாது என்பவர் நிலத்தை அளக்கவேண்டி பணம் கட்டியதால் நானும், கிராம உதவி ஆய்வாளர் முனுசாமி என்பவரும் குப்பூரில்உள்ள மாது என்பவர் நிலத்துக்கு காலை 10.00 மணிக்கு சென்றோம். நிலத்தை அளந்து முடித்துவிட்டு மாதுவீட்டில் அமர்ந்திருந்தோம். பின்னர் அங்கிருந்து நாங்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். சண்டை நடந்தது எதுவும் நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை இது குறித்து விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசுதரப்பில் வேண்டியதால் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 27.04.2023-ம் தேதி காலை 10.30 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்தபோது எதிரிகள் அனைவரும் அ.சா.1, அ.சா.4, அ.சா.5 மற்றும் மாது ஆகியோரை தகாத வார்த்தையால் பேசி கையாலும், தடியாலும், கத்தியாலும் அடித்து காயப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்ததை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்பொது வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை** – (எதிரிகள் தரப்பில் இல்லையென தெரிவிக்கப்பட்டது).

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No. 08/2024

வழக்கு சாட்சி: PW : 6 நாள்: 30.12.2024.
Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | ஜாதி: | |
| த/பெ./ க.பெ. | ஜெகன்குமார் | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 30.12.2024.

**முதல் விசாரணை –**

நான் தற்போது குமாரசாமிபேட்டையில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்துவருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு நண்பர் ஆவார். கடந்த 09.10.2022-ம் தேதியன்று எதிரி கவியரசு காரினை ஓட்ட, அதில் நானும், சந்தோஷ், ராகுல், ஜீவபாரதி ஆகியோர் அமர்ந்துசென்றோம். கார் நான் பணிபுரியும் நிறுவனத்தின் உரிமையாளர் சுபாஷ்சின் நண்பருடையதாகும். இரவு 10.00 மணியளவில் சவுளூர் மேம்பாலத்தில் சேலம் நோக்கி சென்றுகொண்டிருந்தபோது வலதுபக்கமாக சென்றுக்கொண்டிருந்த லாரி திடீரென இடது பக்கமாக எவ்வித சைகையும் செய்யாமல் திரும்பியதால் நாங்கள் சென்ற கார் லாரியின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு இரண்டு கால்கள் மற்றும் முகத்தில் அடிப்பட்டது. சம்பவயிடத்தில் சந்தோஷ் மற்றும் ராகுல் இறந்துவிட்டனர். ஜீவபாரதி மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டார். நான் தருமபுரி அரசு மருத்துவமனை மற்றும் கோவை கங்கா மருத்துவனையில் சிகிச்சை பெற்றேன். விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசுதரப்பில் வேண்டியதால் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலிசார் விசாரணையில் நான் கடந்த 09.10.2022-ம் தேதி இரவு 10.00 மணியளவில் கிருணகிரி to சேலம்மெயின்ரோடு மாட்டுக்காரனூர் இரயில்வே மேம்பாலத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது எதிரி கவியரசு காரினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று முன்பாக சென்ற லாரியின்மீது மோதி விபத்து ஏற்படுத்திகதாக கூறிவிட்டு தற்பொழுது எதிரியானவர் எனது நண்பர் என்பதால் அவரை காப்பற்றவேண்டி மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** - (எதிரி தரப்பில்)

விபத்திற்கு காரணம் காரின் முன்னால் சென்ற லாரி எவ்வித சைகையும் செய்யாமல் இடதுபுறமாக திரும்பியது என்றால் சரிதான். எதிரி காரினை மெதுவாகவும், சாலை விதிகளை கடைப்பிடித்தும் ஓட்டிசென்றார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை